2002 அக்டோபர் 30]

அதுபோலவே ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள், தொகுதியைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேருக்கு மேல் உள்ளார்கள்; இவர்கள் ஒவ்வொரு முறையும் பதிவுக்கோ, வாகனங்களைப் புதுப்பித்து லைசென்ஸ் பெறுவதற்கோ தஞ்சைக்குச் செல்ல வேண்டியுள்ளது. பட்டுக்கோட்டையிலே இருந்து தஞ்சைக்குப் போகவும், வரவும் கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் வருகிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை பகுதி மக்களுடைய கோரிக்கையான இந்த R.T.O.. அலுவலகத்தை வரக்கூடிய காலங்களிலாவது தொடங்க முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் புதிய பகுதி அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு பகுதி 2 திட்டம் 2001-2002-ல் பரிசீலிக்கப்பட்டது. அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு தற்போது புதிய அலுவலகங்கள் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் புதிய அலுவலகம் அமைப்பது தொடர்பாக தற்போது வாய்ப்பு ஏற்படவில்லை. இருந்தபோதும், தற்போது வாய்ப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோமேதவிர, எப்போதும் வாய்ப்பு இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக நிதிநிலைமை சீரடைந்த பின்பு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 79, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

79—

கட்டடம்

***19915—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2002 அக்டோபர் 30

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 80 சென்ட் நிலம், திருப்பூர் வீடு கட்டும் சங்கத்தினரால் தானமாக வழங்கப்பட்டு போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் ஓர் ஏற்றுமதி நிறைந்த தொழில் நகரம் ஆகும். அங்கே நாள்தோறும் எண்ணற்ற புதிய, புதிய வாகனங்கள் எல்லாம் அதிகப்படியாகப் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் போக்குவரத்துத் துறைக்கு மாபெரும் நிதி வருமானம் வருகிறது. தமிழகத்திலே இருக்கின்ற ஏனைய பகுதிகளைக் காட்டிலும் கூடுதலான வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய போக்குவரத்து அலுவலகம் திருப்பூர் நகரிலே இருக்கக்கூடிய அலுவலகம் ஆகும். அங்கே இருக்கக்கூடிய அந்தப் போக்குவரத்து அலுவலகம் காதி போர்டுக்குச் சொந்தமான இடத்தில் வாடகை கொடுத்து இயங்கி வருகிறது. அவர்கள் அந்த அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக நாங்கள், கூட்டுறவுத் துறையிலே இருந்து, மாற்று இடம்கூடத் தேர்வு செய்து கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூர் நகருக்கு வருகை தந்தபோதுகூட அந்த இடத்திலே அடிக்கல் நாட்டிவிட வேண்டுமென்று நாங்கள் கூடுதல் முயற்சி எடுத்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். எனவே, தற்போது அந்த காதி போர்டு அலுவலகத்திலே இருக்கின்ற அந்தப் போக்குவரத்து அலுவலகம் காலி செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் போர்க்கால அடிப்படையில் விரைவாக அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிதி நிலைமைக்கு ஏற்ப இதனைச் சிந்திக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2002 அக்டோபர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

80—

துணை மின் நிலையம்

***6681—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி, வாளாடி பகுதியில் புதியதாக 110/11 கி.வா. துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி, வாளாடி பகுதியில் 110/11 கி.வா. துணை மின் நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்லிக்கொண்டு, வருகின்ற பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அது அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய லால்குடி தொகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி அளித்த கடையேழு வள்ளல்களின் மறுபிறவி மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய லால்குடி தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 81. திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.